# 13 அன்றாட வாழ்வில் சந்திக்கும் இடையூறுகளை உரிய முறையில் முகங்கொடுத்து மகிழ்ச்சியான வாழ்வை அமைத்துக்கொள்வோம்

கிறிஸ்ரி உல்லாச விடுதியில் தொழில் செய்தான். அவன் வரவேற்பு அதிகாரியாக வேலையில் சேர்ந்து கொண்டது மிகச் சந்தோஷமாகவே இருந்தது. அவனுக்கு அதிகமான வெளிநாட்டவர்களுடன் சேர்ந்து பணிசெய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது. வேலையில் சேர்ந்து ஒரு வருடத்தின் பின் கிறிஸ்ரி நோய்க்காளானான். அவனுக்கு சிறுநீர்கழிக்கும்போது வலியும் எரிவும் ஏற்பட்டது. பாலுறுப்பில் அரிப்பு ஏற்பட்டது. சிறுநீர் வழியினூடாக சீழ் போன்ற திரவமும் வெளியேறியது. விதைப்பையில் வலியையும் வீக்கத்தையும் உணர்ந்தான். இதனால், கிறிஸ்ரி தனது நெருங்கிய நண்பன் மகேசுக்கு இதைப்பற்றி கூறி, மகேசுடன் வைத்தியரைச் சந்தித்து வைத்திய பரிசோதனையை மேற்கொண்டான். கிறிஸ்ரி பாலியல் மூலம் கடத்தப்படும் நோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டுள்ளான் என்பது வைத்தியரின் பதிலாக அமைந்தது. இதைக் கேட்ட கிறிஸ்ரி தன் வாழ்க்கையே இருண்டு விட்டதாக உணர்ந்தான். தனக்கு இந்த நிலை ஏற்படக் காரணம் என்ன என அவன், அவனது மனதுக்குள் கேள்வி கேட்டான். அவனது தகாத நடத்தைகளின் பலனே இதுவென உணர்ந்தான். சிகிச்சை நிலையத்தைவிட்டு வெளியே வந்த கிறிஸ்ரி, நண்பன் மகேசிடம் இது பற்றிக் கூறினான். அறிவான இளைஞனான மகேஷ், நண்பனை நல்வழிக்குக் கொண்டுவந்து நோயைக் குணப்படுத்தும் பொருட்டு வைத்தியரை சந்தித்து தேவையான ஆலோசனைகளைப் பெற்றுச் செயற்படத் தீர்மானித்தான்.

**செயற்பாடு 13.1**

வைத்தியரின் பதிலின் பின் மகேஷ் மற்றும் கிறிஸ்ரி இந்தச் சவாலைச் சந்திக்க எடுத்த முயற்சிகள், முறைகள் பற்றிய உங்கள் கருத்துகளை விபரிக்குக.

மகேஷ் முதலில் வைத்தியரைச் சந்தித்து பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றான். வைத்தியரின் வரைவிலக்கணப்படி பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள் என்பது, பாதுகாப்பற்ற உடலுறவின்

மூலம் நோய் பீடிக்கப்பட்ட ஒருவரிலிருந்து மற்றொருவருக்குக் கடத்தப்படும் நோய்கள் என்பதாகும். இத்தகைய பாலியல் உறவுகளை வைத்திருக்கும் எந்தவொருவருக்கும் இந்த நோய் தொற்றும் என்று மகேஷ் தெரிந்து கொண்டான். அடுத்து, இந்நோய் எவ்வாறு கடத்தப்படுகின்றது என்பதையும் அவர்கள் அறிந்து கொண்டனர்.

- தொற்றுதலடைந்த ஒருவருடன் பாலியல் தொடர்புகொள்வதால்.
- தொற்றுதலடைந்த குருதியை ஏற்றுதல்.
- தொற்றுதடைந்த ஊசிகள் மூலம் கிருமிகள் குருதியினுள் விடப்படல்.

  அதாவது தொற்றுக்குள்ளான ஒருவரின் குருதியுடன் தொடர்புபட்ட ஊசிகள் மற்றும் ஏனைய அறுவைச் சிகிச்சை உபகரணங்கள், பச்சை குத்தப் பயன்படும் கருவிகள் என்பவற்றை கிருமியழிக்காமல் பயன்படுத்துவதன் மூலம்
- தொற்றுக்குள்ளான கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து அவருடைய குழந்தைக்கு


அதாவது நோய் தொற்றி உரிய சிகிச்சை பெறாத தாயிடமிருந்து சூல்வித்தகத்தினூடாக கருவிலுள்ள குழந்தைக்கும் தொற்றலாம். பிரசவத்தின் பின் தாய்ப்பால் பருகுவதன் ஊடாகவும் இந்நோய் தொற்றலாம் என்பதை அறிந்து கொண்டனர்.

கிறிஸ்ரியும் மகேசும் ஆச்சரியத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்தனர். பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்கள் எவை? என்ன என்பதைத் தெரிந்து கொள்வதே அவர்களின் அடுத்த தேவையாக இருந்தது. அவர்களிடம் இலங்கையில் காணப்படும் இத்தகைய நோய்கள் சிலவற்றை வைத்தியர் குறிப்பிட்டார்.

1 கொணோறியா (Gonorrhoea)
2 பாலுறுப்பு - ஹேர்ப்பிஸ் (Genital Herpies)
3 சிபிலிசு (Syphilis)
4 சிறுநீர்த் திரவ நோய் (Non Gonococal urethritis)
5 கிளமிடியா (Chlamydia)
6 எயிட்ஸ் (AIDS) உருவாக்கப்பட்ட நோய் எதிர்ப்புத் தன்மை குறைவின் காரணமாக ஏற்படும் நோய் அறிகுறிகளின் தொகுப்பு
(Acquired Immune deficency syndrom)

சந்தர்ப்பங்கள் எவை என்பதைத் தெரிந்துகொள்ள மகேஷ் அதிக அக்கறை செலுத்தினான். வைத்தியர் கீழே காணப்படும் எண்ணக்கரு வரைபடத்தை காட்டி வாசிக்கச் சந்தர்ப்பமளித்தார்.

**பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள்**




இத்தகைய பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்களின் அறிகுறிகள் பாலுறுப்புக்களில் ஏற்படும் மாற்றங்களே என வைத்தியர் விளக்கமளித்தார். அதுமட்டுமல்லாது உடலின் எல்லா இடங்களிலும் இந்நோயினால் ஏற்படும் அறிகுறிகள் தோன்றும் எனவும் கூறினார். இதில் அபாயகரமான விடயம் எதுவெனில், சிலவேளைகளில் நோய்க் கிருமிகள் உடலினுள் சென்றாலும் எவ்வித அறிகுறிகளையும் வெளிக்காட்டாதிருப்பதாகும். இதனால், இந்நோய்கள் பெரும்பாலும் உடலுறவு கொள்ளும் இருவருக்கும் தெரியாமலே ஒருவரிடமிருந்து மற்றையவருக்குத் தொற்றக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதென வைத்தியர் கூறினார். மேலும், இந்நோயினை அறிந்துகொள்ளக்கூடிய பொது அறிகுறிகளையும் வைத்தியர் அவர்களுக்குக் கூறினார்.

## பாலியல் நோய்களின் பொது அறிகுறிகள்

- ❖ பாலுறுப்புகளில் ஏற்படும் அரிப்பு
- ❖ இப்பிரதேசத்தில் தோன்றும் பருக்கள், புண்கள், கொப்புளங்கள், தேமல், உண்ணிகள்.
- ❖ யோனிமடலிலும் ஆண்குறியிலும் சீழ் வெளியேற்றம்.
- ❖ சிறுநீர் கழிக்கும்போது வலி மற்றும் எரிவு ஏற்படல்.
- ❖ உடலுறவின்போது ஏற்படும் வேதனை.
- ❖ விதைப்பையின் வீக்கம் மற்றும் வலி.

பாலியல் நோய்கள் பற்றி மேலும் அறிய விரும்பின் இந்த அட்டவணையை வாசிக்குமாறு வைத்தியர் மகேசுக்கும் கிறிஸ்ரிக்கும் ஆலோசனை வழங்கினார்.

| நோய் | நோய்க் காரணி | நோய் பரவும் காலம் | நோய் அறிகுறி | ஏற்படும் விளைவுகள் |
| --- | --- | --- | --- | --- |
| கொனோறியா (Gonorrhoea) | பற்றீரியா (*Neisseria gonorrhoea*) | 2-5 நாள் | ஆண் குறியிலிருந்து மஞ்சள் நிற அல்லது வெண்ணிறத் திரவம் வெளியேறல்.<br>அடிக்கடி சிறுநீர் வெளியேறல்.<br>சிறுநீர் கழிக்கும்போது வலி மற்றும் எரிவு ஏற்படல்.<br>பெரும்பாலும் பெண்களில் தெளிவான குணங்குறிகள் காட்டப்படுவதில்லை<br>அடிவயிற்றில் வலி<br>யோனிமடலினூடாக மஞ்சள்நிறத் திரவம் வெளியேறல். | கரப்பிணித் தாய்மாருக்கு இந்நோய் ஏற்பட்டால் அது குழந்தைக்கும் கடத்தப்படலாம். அதன் விளைவாக குழந்தையின் கண்கள் குருடாக இடமுண்டு.<br>மலட்டுத் தன்மை ஏற்படலாம்.<br>ஆண் இனப்பெருக்க உறுப்புக்குப் பாதிப்பு ஏற்படலாம். |

| நோய் | நோய்க் காரணி | நோய் பரவும் காலம் | நோய் அறிகுறி | ஏற்படும் விளைவுகள் |
| --- | --- | --- | --- | --- |
| பாலுறுப்பு ஹேர்ப்பிஸ் (Genital Herpes) | ஹேர்ப்பிஸ் சிம்ப்லெக்ஸ் வைரஸ் I அல்லது II | 2-7 நாள் | வாய்வழி, பாலுறுப்புவழி, குத வழியில் புண்கள் ஏற்படலாம்.<br><br>சிறிய நீர்க்கொப்புளங்கள் தோன்றியபின் வெடித்து சிறிய வேதனைமிக்க புண்கள் தோன்றும்.<br><br>சிறுநீர்கழிக்கும்போது எரிவு மற்றும் வலி.<br><br>காய்ச்சல். | மனரீதியான உளைச்சலுக்கு உள்ளாவார். |
| பாலுறுப்பு உண்ணிகள் (Genital warts) | ஒரு வகை வைரஸ் *(Human papilloma virus)* | இரண்டு கிழமை தொடக்கம் சில மாதங்கள் | பாலுறுப்புகளில் உண்ணிகள் காணப்படல் | கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்படும்.<br><br>தொற்றுதலடைந்த ஒரு கர்ப்பிணியிலிருந்து பிரசவத்தின்போது குழந்தைக்கு வைரசு கடத்தப்படலாம் |
| சிபிலிசு (Syphilis) | திரெப்போனியா பல்லிடம்<br><br>*(Treponema pallidum)* | 9-10 நாள் | பாலுறுப்புப் பிரதேசத்தில் புண்கள் தோன்றல்<br><br>உடலெங்கும், குறிப்பாக உள்ளங்கைகளிலும் சொறிவு (Rash) ஏற்படல்<br><br>நிணநீர்ச் சுரப்பிகள் வீங்கிப் பருத்தல்<br><br>காய்ச்சல் மற்றும் தசைவலி<br><br>தலைவலி | கரு கலைதல்.<br>இறந்த குழந்தைகள் பிறத்தல்<br><br>குழந்தை தொற்றுக்குள்ளாகிப் பிறத்தல் |

| நோய் | நோய்க் காரணி | நோய் பரவும் காலம் | நோய் அறிகுறி | ஏற்படும் விளைவுகள் |
|---|---|---|---|---|
| சீறுநீர்த் திரவ நோய் (Non-Gonococcal Urethritis) | கிளமீடியா *(Chlamedia)* ஒரு நுண்ணங்கி | 7-21 நாள் | ஆண் குறியிலிருந்து வெள்ளை நிறத் திரவம் வெளியேறல்<br>சிறுநீர் கழிக்கும்போது வலி மற்றும் எரிவு<br>விதைப்பை வீக்கம் மற்றம் வலி<br>யோனிமடலினூடாக மஞ்சள் நிறத் திரவம் வெளியேறல்.<br>மாதவிடாய்ச் சிக்கல்<br>அடி வயிற்றில் நோவு | மலட்டுத் தன்மை |

மிகநன்று
3 புள்ளி

இத்தகைய நோய் அறிகுறிகள் ஏற்படுமிடத்து வைத்தியரை நாடாவிடின் என அவனுக்குக் கூறினார். பாரிய விளைவுகள் ஏற்படுமென வைத்தியர் கூறினார். தேவையான சிகிச்சையை உரிய காலத்தில் உரிய முறையில் பெற்றுக் கொண்டால் இந்நோயால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளமுடியும் என வைத்தியர் கூறியவிடத்து கிறிஸ்ரி மகிழ்ச்சியில் திளைத்தான். கர்ப்பிணித் தாய்மார் ஒவ்வொருவரும் கர்ப்பகாலத்தில் VDRL சோதனையை செய்து கொண்டால் சிபிலிசு நோயைத் தடுக்கலாம் என வைத்தியர் குறிப்பிட்டார்.

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரி உட்பட இலங்கை முழுவதுமுள்ள பிரதான வைத்தியசாலைகளில் பாலியல் நோய்கள் மற்றும் நோய் சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இந்த வைத்தியசாலைகளில் அல்லது சுகாதார திணைக்கள அதிகாரிகளிடம், பிரதேச சுகாதார நிலைய அதிகாரிகளிடமும் இது பற்றிய மேலதிக விடயங்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொண்ட பின் கிறிஸ்ரி மற்றும் மகேஷ் ஆகியோர் பலவித கற்பனைகளைத் தாங்கியவாறு மீண்டும் வீட்டுக்கு வருவதற்காக சிகிச்சை நிலையத்தைவிட்டு வெளியேறினர்.

**செயற்பாடு 13.1**

நீங்கள் மகேஷ் எனின், கிறிஸ்ரியின் இப்பிரச்சினைக்கு எடுக்கும் நடவடிக்கை பற்றி விபரிக்குக.

கிறிஸ்ரி யோசனையுடன் பக்கத்து வாங்கில் அமர்ந்திருந்த கவர்ச்சியான இளைஞன் மற்றும் யுவதியை கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருப்பதை மகேஷ் கவனித்தான். அந்த இளஞ்சோடிகளின் முகத்தில் மரணபயம் தென்பட்டது. கிறிஸ்ரி, கடந்த பன்னிரெண்டு வருடகாலமாக இங்கிலாந்தில் வசித்து வரும் தனது நண்பன் சாலியவே அந்த இளைஞன் என்பதை அறிந்துகொண்டு, சாலிய உனக்கு என்னை ஞாகமிருக்கா? என வினவ, "ஆம்".... என்று சாலிய சோகக் குரலில் பதிலளித்தான்.

"நீ என்ன இங்கே?" என கிறிஸ்ரி கேட்க.
"நீ என்ன இங்கே?" என சாலிய திரும்பிக் கேட்டான்.

கிறிஸ்ரி தனது கதையைக் கூறி தினமும் மருந்து எடுக்க இங்கு வருவதாகவும் உதவிக்கு நண்பன் மகேஷ் வருகிறான் என்றும், எதிர்காலத்தில் ஒரு நாள் பூரண சுகமடைவேன் என வைத்தியர் கூறியதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினான்.

கிறிஸ்ரி என்னால் அப்படி நினைக்க முடியவில்லை, நான் தற்போது மரணமடையும் நாளை எண்ணிக் கொண்டிருக்கின்றேன். நான் மட்டுமல்ல, எனது அருமை மனைவி ஷாலினியும் என்னால் நோய்க்குள்ளாகி விட்டாள். நாங்கள் இருவரும் தற்போது குணப்படுத்த முடியாத நோயால் பீடிக்கப்பட்டுள்ளோம். இன்னும் இந்நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என சாலிய வேதனையுடன் சொல்லிக் கொண்டே சென்றான்.

"ஏன் உங்களுக்கு என்ன நடந்தது?" எனப் பதற்றத்துடன் கிறிஸ்ரி வினவினான். தானும் அவனது மனைவியும் தற்போது AIDS நோயினால் பீடிக்கப்பட்டுள்ளோம் என்று சாலிய கூறினான். AIDS கிறிஸ்ரி அதிர்ச்சியுடன் வினவினான். இவர்கள் உரையாடலைக் கேட்ட மகேஷன் உடலில் உயிர் இல்லாததைப்போல உணர்ந்தான். மகேஷ் உடனே மனதைத் தைரியமாக்கி இந்நோய் பற்றிய மேலதிக விவரங்களை சாலியவிடமிருந்தும் வைத்தியரிடமிருந்தும் பெறமுயற்சித்தான். எயிட்சானது (AIDS) உடலின்


இலவச விநியோகத்திற்காக.

நோயெதிர்ப்பு சக்தியை அழிக்கின்ற "ஹியூமன் (Human) இமியூன் டெபிசென்சி (Immune) வைரஸ் (Virus) என்னும் HIV வைரசால் ஏற்படுகிறது. (AIDS- Acquired Immune Deficiency Syndrome). AIDS இன்றைய விஞ்ஞான உலகிற்கு பாரிய சவாலாக உள்ளதாகவும் நாம் அனைவரும் AIDS பற்றி அறிந்திருப்பது அவசியம் எனவும் சாலிய குறிப்பிட்டான். பின் மகேஷ் வைத்தியருடன் உரையாடலில் ஈடுபட்டான்.


தற்போது HIV வகைகள் இரண்டை அறிந்துள்ளனர். அவை HIV-I மற்றும் HIV -II எனும் பெயரினால் அழைக்கப்படுகிறது. HIV பற்றி பலவித கதைகள் உண்டு. ஆராய்ச்சிகளின்படி HIV கண்டுபிடிக்கப்பட்டது ஆபிரிக்கா காடுகளில் உள்ள கிரீன்பீஸ் மங்கீஸ் என்று வழங்கப்படும் ஒரு வகை குரங்குகளிடமிருந்தாகும். இக்குரங்குகளின் இறைச்சி மற்றும் இரத்தத்தைப் பச்சையாக உணவில் சேர்த்துக் கொண்டதால் இந்த வைரஸ் மனித உடலில் நுழைந்து பல மாற்றங்களுக்கு உள்ளாகி HIV வைரஸ் உருவானதாகக் கருதுகின்றனர்.


HIV பற்றிக் கேட்ட நண்பர்கள் இருவருக்கும் HIV வைரஸ் இருக்கும் இடங்கள் எவை என அறிவதே அடுத்து தெரிந்துகொள்ள வேண்டிய விடயமாக இருந்தது. HIVவைரஸ் சாதாரண சூழலில் காணப்பட்டதெனவும் சுற்றுப்புறக் காற்று, நீர், உணவில் காணப்படாது எனவும் தொற்றுக்குள்ளானவரின் உடலிலேயே இந்நோய்க் கிருமி வாழ்கின்றது எனவும் வைத்தியர் குறிப்பிட்டார்.

நோய் பரவாத விதங்கள் பற்றி அறிந்திருப்பதுவும் அவசியமென வைத்தியர், நண்பர்கள் இருவருக்கும் கூறினார்.

**HIV வைரசின் விசேட குணங்குறிகள்.**

தொற்றுக்குள்ளானவரின் உடலிலே காணப்படல். மனித உடலின் நோய் எதிர்ப்புத் திறனைக் குறைத்தல். கிறிஸ்ரியின் அடுத்த கேள்வியானது பீடிக்கப்படும் சந்தர்ப்பங்கள் எவை? என்பது பற்றியதாகும்.


குருதியில்.
HIV
அதிகமாக
வாழும்
இடங்கள்
ஆண்களின் ஆண் குறியில்
பெண்களின் யோனிமடல் மற்றும் கருப்பைக் கழுத்தில்
தாய்ப்பாலில்


எச்சிலில் (உமிழ்நீர்)
கண்ணீர்
குறைந்த
அளவில்
HIV
வாழும்
இடங்கள்
சிறுநீர்
வியர்வை


தொற்றுக்குள்ளான குருதி மற்றும் குருதித் தயாரிப்புகள் மூலம்.

நோய் உள்ள ஒருவரின் குருதியுடன் தொடர்புபட்ட உட்புகுத்திகள், ஊசிகள் என்பவற்றைப் பயன்படுத்துவதன் மூலம்.

தொற்றுக்குள்ளானவரின் அங்கங்கள், இழையங்களை மற்றொருவருக்கு மாற்றீடு செய்யும்போது.



எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவருடன் பாதுகாப்பற்ற பாலியல் உறவில் ஈடுபடுவதன் மூலம்.




தொற்றுக்குள்ளான கர்ப்பிணிப் பெண்ணிடமிருந்து அவருடைய குழந்தைக்குக் கருப்பையில் இருக்கும்போது. பிரசவத்தின்போது. தாய்ப்பால் மூலம்

உரு 13.2

குருதி ஏற்றத்திற்கு எப்போதும் தொற்று அற்றதென உறுதிப்படுத்தப்பட்ட குருதியை மட்டும் ஏற்றல், எப்போதும் தொற்று நீக்கப்பட்ட உட்புகுத்திகளையும் ஊசிகளையும் பயன்படுத்துவதன் மூலம் HIV/ AIDS மற்றும் ஏனைய நோய்கள் தொற்றாது தடுக்கலாம்.

குருதி ஏற்றும் போதும், தடுப்பூசி ஏற்றும் போதும், தலைமயிர் வெட்டும் உபகரணங்கள், முகச் சவரம் செய்யும் உபகரணங்கள் கிருமியழிக்கப் பட்டுள்ளனவா என உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். முடிந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உங்களுக்குத் தேவையான உப்புகுத்திகள், ஊசிகள், சவர அலகு போன்றவற்றை புதிதாக வாங்கிப் பயன்படுத்துங்கள். உங்கள் பாதுகாப்பிற்கு நீங்களே பொறுப்பென சிந்தித்துச் செயற்படுங்கள்.

## HIV தொற்றும் போதான போராட்டம்




HIV சக்தி அதிகரிக்கும். உடம்பில் நோயெதிர்ப்புச் சக்தியை அழிக்கும். வேறு நோய்களை ஏற்படுத்தி AIDS ஐ உண்டுபண்ணும்.

## AIDS மிரட்டல்

**பின்வரும் முறைகளால் AIDS தொற்றமாட்டாது.**



தொற்றுக்குள்ளானவரை தொடுதல், கைகுலுக்குதல் மூலம்.




ஈக்கள், நுளம்புகள் மூலம்



தொற்றுக்குள்ளானவருடன் விளையாடுவதன் மூலம்.



தொற்றுக்குள்ளானவருடன் ஒன்றாகக் குளித்தல் மற்றும் நீந்துதல் மூலம்.




ஒரு கழிவறையைப் பயன்படுத்தல் மூலம்.



தும்மல் மற்றும் இருமல் மூலம்.



தொற்றுக்குள்ளானவரை முத்தமிடல் மூலம்.



தொற்றுக்குள்ளானவர் பொதுவாக உபயோகிக்கும் பீங்கான், கோப்பை, தொலைபேசி என்பவற்றைப் பயன்படுத்தல் மூலம்.



தொற்றுக்குள்ளானவர் உபயோகிக்கும் ஆடைகள், துவாய்கள் மூலம்.

HIV தொற்றுக்குள்ளானவரை எவ்வாறு அடையாளம் கண்டுகொள்ளலாம் என கிறிஸ்ரி வினாவினான். வைத்தியர், இதற்கமைய HIV, தொற்றுக்குள்ளானவருக்கு நீண்ட காலம் எவ்வித அறிகுறிகளையும் காட்டாது எனக் கூறினார். தொற்றுக்குள்ளானவர் எனக் கண்டுகொள்ளச் சரியான வழி அவர்களின் குருதியைப் பரிசோதனைகள் செய்து பார்ப்பதே என சாலிய விளக்கமளித்தான். இதற்காக இரண்டு குருதிப் பரிசோதனை செய்யப்படுவதாக சாலிய கூறினான்.

HIV தொற்றுக்குள்ளானவர் என அறியும் பரிசோதனை.

**ELISA TEST**

- இது ஆரம்பத்தில் அறிந்துகொள்ளச் செய்யும் பரிசோதனை.
- இப்பரிசோதனை Possitive (+) பெறுபேற்றைக் காட்டுமாயின் WESTERN BLOOD TEST மேற்கொள்ளப்படும்.

**WESTERN BLOOD TEST**

- இது உறுதிப்படுத்தும் பரிசோதனை.
- இப்பரிசோதனையில் பெறுபேற்றைக் காட்டுமாயின் தொற்றுக்குள்ளானவர் என உறுதிப்படுத்தப்படும்.

**இப்பரிசோதனையைப்பற்றி மாணவர் கற்றுக்கொள்வது அவசியமன்று. மேலதிக விளக்கங்களுக்காகவே இவை தரப்பட்டுள்ளன.**

குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்வது எப்படி? என்னும் வினாவிற்கு சாலியவால் பின்வருமாறு விடையளிக்கப்பட்டது.

- பிரதான பொது வைத்தியசாலை பரிசோதனை நிலையங்களில்
- பாலியல் நோய் சம்பந்தமான சிகிச்சை நிலையங்களில்
- தனியார் வைத்தியசாலை மற்றும் பரிசோதனை நிலையங்களில்
- இரத்த வங்கிகளில்

இங்கு HIV தொற்றுக்குள்ளானவருக்கே பரிசோதனையின் முடிவுகள் கூறப்படும். இங்கு இவ்விடயம் இரகசியமாகவே பேணப்படும். HIV உடலில் புகுந்த பின் அது உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றலை ஒடுக்குகிறது. தற்போதைய பரிசோதனைகளின்படி வைரசு தொற்றியுள்ளது என்று தெரிந்துகொள்ள 3-6 மாதங்கள் எடுக்கின்றன.

நோய்க்கிருமிகள் உண்டென்பதை குருதிப் பரிசோதனையின் மூலம் அறிய முடியாத இக்காலப் பகுதி WINDOW PERIOD என அழைக்கப்படுகிறது. இக்காலப்பகுதியில் HIV உடம்பில் இருப்பதால் தொற்றுள்ளவரிடமிருந்து இன்னொருவருக்கு நோய் தொற்றலாம்.

AIDS நோயின் அறிகுறிகளை அறிந்துகொள்ள நண்பர்களிருவரும் கூடிய ஆர்வம் செலுத்தினர்.

**பிரதானமான நோய் அறிகுறிகள்.**

- திடீரென நிறை குறைதல் (ஒரு மாதத்தில் 10% நிறை குறைவு)
- ஒரு மாதத்துக்கு மேலான காய்ச்சல்.
- ஒரு மாதத்துக்கு மேலான கடுமையான வயிற்றோட்டம்.
- உடலின் பல்வேறு பகுதிகளிலுள்ள நிணநீர்ச்சிறு கணுக்கள் வீங்குதல்.

**ஆரம்ப நோய் அறிகுறிகள்**

- களைப்பு.
- இருமல்.
- தோல் நோய்கள்.
- கைகால் வலி.
- அதிகமாக வியர்த்தல்.

இக்காலப்பகுதியில் தொற்றுக்குள்ளானவரிடம் அதிக நோயெதிர்ப்புச் சக்தி குறைவடைந்து பலவித பாரிய விளைவுகளுக்கு உள்ளாகலாம்.

**செயற்பாடு 13.2**

எயிட்ஸ் நோய் பற்றி இதுவரை நீங்கள் தெரிந்துகொண்ட விடயங்கள் பற்றி விபரிக்குக.

HIV/AIDS நோய் பற்றி இதுவரை சாலிய மற்றும் வைத்தியருடன் உரையாடிய நண்பர்கள் இருவரும் தற்போது சாலிய பெற்றுக்கொள்ளும் சிகிச்சை எத்தகையது என அறிந்துகொள்ள வைத்தியரிடம் வினவினர்.

HIV/AIDS நோயைப் பூரணமாகக் குணப்படுத்த இதுவரை எவ்வித மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், நோயின் தன்மையை குறைக்க தற்போது பயன்படுத்தப்படும் மருந்துகளின் விலை அதிகம் என்பதால் விலை கொடுத்துப் பெற அதிக சிரமமாக உள்ளதென சாலிய கூறினான்.

குறிப்பிட்ட காலப்பகுதிவரை நோயின் தன்மையைக் கட்டுப்படுத்தி வைப்பதற்காக ஆரோக்கியமான உணவை உண்ணல், தினந்தோறும் உடற்பயிற்சிகளில் ஈடுபடல் மற்றும் உரிய முறையில் ஓய்வு மற்றும் நித்திரை போன்றவற்றை பெற்றுக்கொள்வதாக சாலிய வேதனையுடன் பதிலளித்தான்.

HIV/AIDS நோய்க்கு கூடுதலாக உள்ளாவோர் நாட்டின் அபிவிருத்திக்குப் பாடுபடும் இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதுடையவர்களே. வாழ்வின் அழகிய இனிய பருவமான இளமைப் பருவத்திலிருக்கும் நீங்கள் நோயால் பீடிக்கப்படாதிருக்க வழிசமைத்துக்கொள்ளுங்கள். உங்கள் மனசாட்சிக்கு நேர்மையாக சரியான முடிவை எடுப்பதன் மூலம் அது முடியும்.

- தகாத நடத்தைகளைக் கைக்கொள்ளும் நபராக இல்லாதிருத்தல். தமது சகபாடிகளின் தகாத நடத்தைச் செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல்.
- சகபாடிகளின் தகாத நடத்தைச் செயற்பாடுகளை திருத்துதல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல்.
- எதிர்காலத்தைச் சிந்திக்காது பொருத்தமற்ற உடனடித் தீர்வுகளை எடுக்காதிருத்தல்.
- சமூகம் ஏற்றுக்கொள்ளாத விடயங்கள், நடத்தைகளுக்கு அடிமையாகாதிருத்தல். தற்போது, நீங்கள் நல்லதோர் நபர் என நினைக்கிறீர்களா?

**செயற்பாடு 13.3**

HIV/AIDS பற்றிய சரியான தகவல்களை அறிந்துகொண்டு அதைப்பற்றி ஏனையவர்களுடன் கலந்துரையாடுக.


இலவச விநியோகத்திற்காக.

HIV/AIDS நோய் பரவுவதைத் தடுப்பதற்கு பாடசாலை மாணவர்களான நீங்களும் பங்களிப்புச் செய்யலாம். அதற்காக நீங்கள் செய்ய வேண்டியது.

- பாடசாலையில் சுவர்ப் பத்திரிகை, விவாதம், கலந்துரையாடல், கண்காட்சி மூலம் மாணவர்களை விழிப்புணர்வூட்டல்.

- தகாத நடத்தையுடை நண்பர், நண்பிகள் இருப்பின், அவர்களுடன் கலந்துரையாடி ஆலோசனை வழங்கல்.

- குருதி ஏற்றம் மற்றும் அறுவைச் சிகிச்சைகள் திடீர் விபத்துகளை இயலுமானவரை தடுத்துக்கொள்ளல்.

- குருதி ஏற்றும்போது HIV வைரஸ் இல்லாத குருதி என உறுதிப்படுத்தி ஏற்றுதல்.

- காது குத்தல், தலைமயிர், வெட்டுதல், முகச் சவரம், தடுப்பூசி ஏற்றல் முதலியவற்றுக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் தொற்றுநீக்கி உள்ளதென உறுதிப்படுத்தல்.

- HIV/AIDS நோயாளி ஒருவரை சந்தித்தவிடத்து அவரை ஒதுக்காமல் சமூகத்தில் ஒருவராக ஏற்று அவருக்கு தேவையான வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

உடலுறவால் மட்டுமல்லாது வேறு வழிகளாலும் இந்நோய் பரவுவதால் ஒருவர் இவ்வாறான நோய்நிலைமைக்கு ஆளாக சமூகமே காரணமென உணர்ந்து செயற்படவேண்டும்.